**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 27.11.2025**
**OS. No. 78/2021**
**வழக்கு சாட்சி PW.1– சகாயநாதன் த/பெ.கண்ணன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

6) என்னை இந்நீதிமன்றத்தில் 13.03.2024 ல் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் பிறகு இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு, அவர் தாவா சொத்தை அளந்து பார்த்து அறிக்கை 25.01.2025 ல் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதன் பிறகு தற்போது வரை ஒரு வருடமாக நான் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றால் சரிதான், எனக்கு பைபாஸ் சர்ஜரி செய்யப்பட்டுள்ளது அதனால் வர இயலவில்லை. அதற்கான ஆவணங்கள் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் நல்ல உடல்நிலையில் தான் இருந்தேன் என்றும், என் தரப்பில் வழக்கில எவ்வித முகாந்திரமும் இல்லாததால் தான் நான் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல.

7) நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையை நான் படித்து பார்த்தேனா என்றால் பார்த்தேன். தாவா சொத்தின் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் என்ன அளவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு நினைவில்லை. என்னிடம் காட்டப்படும் என் பெயரிலுள்ள வா.சா.ஆ.1 தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் 638 சதுரடி மட்டும் தான் எனக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, 1075 சதுரடி ஒதுக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற ஆணையர் தன்னுடைய அறிக்கையில் நான் 1082 சதுரடி நிலத்தில் அனுபவத்தில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை.

8) பிரதிவாதியின் வீட்டின் அளவுகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதியின் நிலத்தின் அளவு வா.சா.ஆ.2 தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம்

667 சதுரடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும், ஆனால் நிலையில் 538 சதுரடி தான் உள்ளதாக நீதிமன்ற ஆணையர் தன் அறிக்கையில் தெரிவித்துள்ளார் என்றால் எனக்கு தெரியவில்லை. நான் எனக்கு வா.சா.ஆ.1 தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் ஒதுக்கப்பட்ட 638 சதுரடியையும் தாண்டி 444 சதுரடி அதிகமாக ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

9) நீதிமன்ற ஆணையர் மற்றும் சர்வேயர் அளந்து தாக்கல் செய்த அறிக்கையின்படி நான் தான் பிரதிவாதியின் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றும், பிரதிவாதி என் நிலத்தை எதுவும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. அதனால் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு நாங்கள் எவ்விதமான ஆட்சேபனையும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை, என் வழக்கறிஞரை தான் கேட்கவேண்டும். இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.